


# 23.08.2026 செய்திகள்

## படிக்காமலும் வேலைக்கும் செல்லாத 8.7 கோடி இளைஞர்கள்: நீதி ஆயோக்

- 2047-ஆம் ஆண்டில் வளர்ந்த பாரதத்துக்கான திறனை மீண்டும் கட்டமைத்தல் என்ற தலைப்பில் நீதி ஆயோக் அறிக்கையை தயாரித்துள்ளது. 2021-இல் நடத்தப்பட்ட 78-ஆவது தேசிய மாதிரி ஆய்வில் கிடைத்த புள்ளிவிவரங்களை அடிப்படையாகக் கொண்டு அந்த அறிக்கையை தயாரித்துள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
- நாட்டில் 8.7 கோடி இளைஞர்கள் படிக்கவோ வேலை செய்யவோ அல்லது பயிற்சியிலோ இல்லாமல் உள்ளனர். அதேபோல் வேலைவாய்ப்பும் இல்லாமல் உள்ளனர். அவர்கள் சுயவேலைவாய்ப்பில் ஈடுபடுவதை ஊக்குவிப்பதற்கு குறைந்த தொகையிலோ அல்லது கட்டணத் தள்ளுபடியிலோ பயிற் சிகள் அளிக்க வேண்டிய உடனடி அவசியம் ஏற்பட்டுள்ளது.
- அவர்களுடைய செயல்பாடுகள் தடைபட்டிருப்பதற்கு நிதிநிலையும் காரணமாகும். ஆதலால் அவர்களுக்கு உறுதியான நிதி ஆதரவும் அளிக்கப்பட வேண்டும். ஊதியத்துடன் சேர்ந்து அவர்களுக்கு அனைத்துத் துறைகளிலும் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். நாட்டில் 8.25 சதவீதம் பட்டதாரிகள் மட்டுமே தங்களது கல்வித் தகுதிக்கேற்ப வேலைவாய்ப்பில் உள்ளனர்.
- 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ந்த நாடாக வேண்டும் என்று இலக்கை அடைவதென்பது, நாட்டு மக்களின் கற்றல், ஊதியம் ஈட்டுதல், தொடர்ந்து முன்னேறுதல் ஆகியவற்றையும் சார்ந்துள்ளது.

SURESH

## சட்டமன்ற உறுப்பினரின் அரசமைப்புக் கடமைகள்

» முக்கியமான நான்கு கருவிகள்

1. சட்டம் இயற்றுதல்:

- அரசு மசோதாக்களை விவாதித்தல், திருத்தங்களை முன்மொழிதல், தனிநபர் மசோதா தீர்மானங்களைக் கொண்டுவருதல்.

2. அரசைக் கேள்வி கேட்பது:

- கேள்வி நேரம், கவன ஈர்ப்புத் தீர்மானம், சட்டமன்ற விவாதங்கள் மூலம் கல்வி, மருத்துவம், குடிநீர், சமூகநீதி போன்றவற்றில் அரசு எடுத்த நடவடிக்கைகளைக் உட்படுத்துதல்.

3. நிதியைக் கண்காணித்தல்

- மானியக் கோரிக்கைகள் (Demands for Grants), வெட்டுத் தீர்மானங்கள் (Cut Motions), பட்ஜெட் விவாதங்கள் மூலம் மக்கள் நலத்துக்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்தல்.

4. குழுக்கள் மூலம் கண்காணித்தல்:

- பொது கணக்குக்குழு, மதிப்பீட்டுக்குழு போன்ற சட்டமன்றக் குழுக்கள் மூலம் ஒதுக்கப்பட்ட மக்கள் பணம் உரிய நோக்கத்துக்குச் செலவிடப்பட்டதா என்பதை ஆராய்தல்.

| அரசமைப்புப் பிரிவுகள் | அரசின் இலக்கு | சட்டமன்ற உறுப்பினரின் பங்கு |
|---|---|---|
| 38, 39, 39A | சமூக நீதி, பொருளாதார ஏற்றத்தாழ்வைக் குறைத்தல், இலவசச் சட்ட உதவி | நலத்திட்ட நிதிகளை ஆய்வுசெய்தல், ஏழைகளுக்குச் சட்ட உதவி கிடைப்பதை உறுதிப்படுத்துதல். |
| 40 | கிராமப் பஞ்சாயத்துகளை வலுப்படுத்துதல், | கிராம சபைகள் சிறப்பாகச் செயல்படவும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரமும் நிதியும் கிடைக்கவும் குரல் கொடுத்தல் |
| 41, 42, 43, 43A | வேலை, நியாயமான ஊதியம், மகப்பேறு உதவி, மனிதநேயமான பணிச்சூழல், | அமைப்புசாராத் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள். gig பணியாளர்கள் உள்ளிட்டோரின் நலனைச் சட்டமன்றத்தில் முன்னெடுத்தல் |
| 44 | குடிமக்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான சிவில் சட்டம். | சமூக ஒப்புமையுடன் கூடிய கொள்கை விவாதத்தை ஊக்குவித்தல் |
| 45,45 | குழந்தைப் பராமரிப்பு, கல்வி நலிவற்ற பிரிவினரின் முன்னேற்றம் | அரசுப் பள்ளிகள், விடுதிகள், உதவித்தொகைகள் போன்றவற்றின் செயல்பாட்டைக் கண்காணித்தல், |
| 47 | ஊட்டச்சத்து, வாழ்க்கைத் தரம், பொதுச் சுகாதாரம். | ஆரம்ப சுகதார நிலையங்கள், அங்கன்வாடிகள், குடிநீர் சுகாதார வசதிகளை மேம்படுத்த வலியுறுத்துதல். |
| 48, 48A | விவசாயம், கால்நடை வளர்ப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு. | நீர்நிலைகள், ஏரிகள், குளங்கள், காடுகள் பாதுகாப்பு, விவசாயக் கட்டமைப்புகளை மேம்படுத்துதல் |
| 50 | நிர்வாகத்தில் இருந்து நீதித் துறையைப் பிரித்தல் | நீதித் துறையின் கதந்திரத்தை மதித்து, சட்டம் கொள்கை உருவாக்கத்தில் தனது பங்கைச் செலுத்துதல் |

## மோரீஷஸுக்கு பெட்ரோலியப் பொருள்கள் நீண்ட கால விநியோகம் : இந்தியா ஒப்பந்தம்

- மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் புரி, இரண்டு நாள் பயணமாக கடந்த 20, 21-ஆம் தேதிகளில் மோரீஷஸ் பயணம் மேற்கொண்டபோது, பொதுத் துறை எண்ணெய் நிறுவனமான இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் மற்றும் மோரீஷஸின் அரசு வர்த்தகக் கழகம் இடையே இந்த 5 ஆண்டு கால ஒப்பந்தம் கையொப்பமானது.
- இந்த ஒப்பந்தத்தின்படி, மோரீஷஸின் பெட்ரோல், டீசல் மற்றும் விமான எரிபொருள் ஆகியவற்றின் முழு இறக்குமதித் தேவையையும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் பூர்த்தி செய்யும்.
- அந்த நாட்டுக்கு பெட்ரோலியப் பொருள்களின் உறுதியான விநியோகங்களை வழங்கவும், விலை ஏற்ற இறக்கங்களால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கும் வகையிலும் இந்த ஒப்பந்தம் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இது குறித்து அதிகாரிகள் கூறுகையில், 'மோரீஷஸ் நாட்டில் உள்ள மெர் ரோக் பகுதியில் ரூ. 240 கோடி முதலீட்டில் சுமார் 27,500 டன் கொள்ளளவு கொண்ட எரிபொருள் சேமிப்புக் கிடங்கு அமைக்கப்பட்டிருக்கிறது. இது அந்த நாட்டின் எரிபொருள் சேமிப்புத்திறனை மேம்படுத்தும் என்பதுடன், முக்கிய எரிபொருள் நிரப்பும் மையமாகவும் அந்த நாட்டை மேம்படுத்தும்' என்று தெரிவித்தனர்.
- உலகின் முக்கிய கச்சா எண் ணெய் சுத்திகரிப்பு மையமாக உருவெடுத்துள்ள இந்தியா, தனது 23 சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து ஆண்டுக்கு சுமார் 26.7 கோடிடன் சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலியப் பொருள்களை உற்பத்தி செய்வதுடன், ஏற்றுமதி நாடாகவும் திகழ்கிறது.

- 'நேபாளம், பூடான் போன்ற அண்டை நாடுகளுக்கு மட்டுமன்றி இந்தப் பிராந்தியத்துக்கு அப்பால் உள்ள பிற சந்தைகளுக்கும் கணிசமான அளவில் ஏற்றுமதி செய்கிறது.
- மத்திய அமைச்சர் புரி, இந்தப் பயணத்தின்போது மோரீஷஸ் பிரதமர் நவீன்சந்திர ராம்கூலம் மற்றும் அந்த நாட்டின் எரிசக்தித் துறை, வர்த்தகம் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, வெளியுறவுத் துறை அமைச்சர்களையும் சந்தித்து ஆலோசனை மேற்கொண்டார்.

## சர்வதேச விமானப் பயணிகளுக்கு போர்டிங் பாஸில் முத்திரை வேண்டியதில்லை : செப்டம்பர் 1-ஆம் தேதி அமல்

- இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்குச் செல்லும் பயணிகளுக்கு போர்டிங் பாஸ் விமான நிறுவனங்களால் அளிக்கப்பட்டு, அது விமான நிலையங்களில் குடியேற்றத் துறையினரால் பரிசோதிக்கப்பட்டு முத்திரையிடப்படும். அதன் பிறகே பயணி, விமான நிலையத்துக்குள் செல்லவும், விமானத்தில் ஏறவும் அனுமதிக்கப்படுவர்.
- இந்நிலையில், குடியேற்றத் துறை அண்மையில் விமான நிலைய அதிகாரிகளுக்கு புதிய உத்தரவை அனுப்பியுள்ளது. அதில் போர்டிங் பாஸில் போடப்படும் முத்திரை, பயணிகளுக்கு மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்துவதாகவும், ஆதலால் சர்வதேச விமான நிலை யங்களில் அந்த நடைமுறையை செப்டம்பர் 1-ஆம் தேதி முதல் கடைப்பிடிக்க வேண்டாம் என்ற முடிவுக்கு வந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- அதேநேரத்தில், விமான நிலையங்களில் உள்ள குடியேற்றத் துறையினரிடம் கைப்பேசிகளில் உள்ள மின்னணு போர்டிங் பாஸை காட்டி பயணிகள் ஒப்புதல் பெறலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.
- முன்னதாக மத்திய தொழிலக பாதுகாப்புப் படையினரும் போர்டிங் பாஸை பரிசோதித்து முத்திரையிட்டு வந்தனர். ஆனால், சில ஆண்டுகளுக்கு முன்பு அந்த நடைமுறையை மத்திய தொழிலக பாதுகாப்புப் படையினரும் நிறுத்திவிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

SURESH'